புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# நேர்காணல் வெளிப்படுத்தும் வில்லுப்பாட்டுக் கலைஞர்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும்

வி.நித்யா
ஆய்வாளர்
தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு -638012

முனைவர் மு. ஹேமலதா,
நெறியாளர்
தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு -638012

ஆய்வுச் சுருக்கம்

பேட்டி காண்பவர் நேர்காணல் செய்பவரிடம் கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் முறை நேர்காணல் ஆகும். நாட்டுப்புறக் கலைஞர்களை நேர்காணல் செய்வதன் மூலம் அவர்களுடைய கலைச்சிறப்பையும் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ளலாம். சமுகத்திற்காகவும் கலைக்காகவும் தங்களை அர்ப்பணித்த பாங்கினை அறிவதோடு அவற்றை இன்றைய தலைமுறையினர்க்கு எடுத்துக்கூறி அக்கலைகளை அழிவிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கலாம்.

திறவுச்சொல்

நேர்காணல் - கலைஞர்கள் - நாட்டுப்புறவியல் - வில்லிசை - சொலவடைகள் - வில் - உடுக்கு - முடக்கு - தாளம் - கட்டை - உறுமி - தக்கை - தந்துபி - ஆர்மோனியம்.

## முன்னுரை

“நேர்காணல்(interview) என்பது கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் ஆகும்”1 என்று மெர்சியம் வெப்ஸ்டர் அகராதி கூறுகிறது. நேர்காணல் என்பது பேட்டி காண்பவர் பேட்டி அளிப்பவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில்களைப் பெறும் உரையாடலாகவே இருக்கும். நேர்காணல்கள் பல்வேறு துறையில் பல்வேறு வகையில் காணப்படுகின்றன.

செய்திக்கு மூலமாக இருப்பவரை அல்லது தானே செய்தியாகும் ஒருவரை நேர்காணல் கொள்வது செய்தி திரட்டுவதில் முக்கியமான ஒன்றாகும். செய்தியாளராக இருப்பவர் நேர்காணல் கொள்வதில் திறமை உடையவராக இருக்க வேண்டும். நேர்காணல்கள் இல்லாமல் செய்திகள் இல்லை என்றும் அளவிற்குச் செய்திகளில் நேர்காணல்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

நேர்காணல்கள் என்பது ஒருவரோடு தொடர்பு கொண்டு அவர் மூலமாக விபரங்களைக் கேட்டுப் பெறுவதாகும். ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி நேர்காணல் என்பதற்கு, “மனிதர்கள் நேருக்கு நேராகச் சந்தித்தல் அதாவது கூட்டம் நடத்தக் காணுதல், செய்தித்தாளில் பணியாற்றுகின்ற ஒருவரும் வெளியிடுவதற்காகத் தகவல்களைத் தர அவர் தேடும் ஒருவரும் கூடிப் பேசுதல்”2 என்று பொருள் தருகிறது.

## நேர்காணலின் நோக்கம்

நேர்காணல் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு நோக்கத்துடன் நடத்தப்பெறும் நோக்கமற்ற நேர்காணல் பொழுதுபோக்குப் பேச்சுப் போலாகி விடும். நேர்காணல் செய்பவர் நேர்காணலின் நோக்கம் குறித்துத் தெளிவாக இருக்க வேண்டும். “பொதுவாக நேர்காணல் நடத்துவதற்கு 1.நட்பு அறிதல், 2. நிகழ்வு விபரம் அறிதல், 3. கருத்து வெளிப்படுத்தல் என்றும் நோக்கங்கள் உள்ளன.”3 என்று தமிழ் இணையக் கல்விக் கழகம் (ta.m.wikipedia.org.) குறிப்பிடுகிறது.

"நாட்டார் தெய்வங்கள், பெருந் தெய்வங்கள், சாத்திரங்கள், அன்றாட நடைமுறைகள், கலை, இலக்கியம், கல்வி, சாதியம், திராவிடக் கருத்தியல், ஆளுமைகள் என அனைத்தையும் பற்றிய பார்வைகள் இயல்பான உரையாடல்களில் சுவையாக வெளிப்படுவதை நேர்காணலில் அனுபவிக்கலாம்"4 என்று தொ. பரமசிவன் குறிப்பிடுகிறார்.

நேர்காணலின் வகைகள்

நேர்காணல் எப்படி வேண்டுமானாலும் அமையலாம். இருப்பினும் பொதுவாக நேர்காணல்கள் பின்வரும் தலைப்புகளில் வகைப்படுத்துகின்றன. 1.தெருவில் காண்போர் நேர்காணல், 2. தற்செயல் நேர்காணல், 3. ஆளுமை விளக்க நேர்காணல், 4. செய்தி நேர்காணல், 5. செய்தி கூட்ட நேர்காணல், 6.செய்தி சுருக்க நேர்காணல், 7. சிற்றுண்டிக் கூட்ட நேர்காணல், 8.தொலைபேசி நேர்காணல், 9. அடைகாத்த நேர்காணல், 10. பட்டம் பறக்கவிடும் செய்தி நேர்காணல், 11. மின்னஞ்சல் நேர்காணல், 12. நிகழ்வு உரையாடல் நேர்காணல்"5 என்று தமிழ் இணையக் கல்விக் கழகம் ta.m.wikipedia.org.
குறிப்பிடுகிறது.

நேர்காணல் செய்தல்

நேர்காணல் கொள்ளப்படுபவரிடமிருந்து நேர்காணல் செய்பவர் பல தகவல்களை வெளிக்கொண்டுவரும் தனித்திறன் உடையவராக இருக்க வேண்டும். அவரிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவர் தனிப்பட்டு "இதனை வெளியிட வேண்டும் (off the recard ) என்று கூறும் செய்திகளை வெளியிட்டுவிடக்கூடாது. பொதுவாக நேர்காணலுக்குத் திட்டமிடல், இணங்க வைத்தல், தெளிவாக அறிதல், தொடர்முயற்சி என்னும் நான்கு முக்கிய பங்குகள் இருக்க வேண்டும்.

நேர்காணலின் பயன்கள்

நேர்காணலில் பல நன்மைகள் கிடைத்தாலும் முக்கிய பயன்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. அவையாவன, 1. செய்திகளை உருவாக்குதல், 2.வேறுபாடுகளை வெளிக்கொணர்தல், 3. பொதுமக்கள் கருத்து உருவாக்குதல், 4. அதிகாரப்பூர்வமான விளக்கங்கள் அறிய துணை செய்தல், கண்டுபிடிப்புகள், 5. திட்டங்கள் விளக்குதல், 6. சமுதாயத்தில் புகழ் பெற்றவர்கள் - வாசகர்கள் ஆகியோருக்கு இணைப்பாக இருத்தல், 7. பல்வேறு கருத்துகள் வெளிவர வாய்ப்பாயிருத்தல், 8. சுவையான கட்டுரை கிடைத்தல்.

இக்கட்டுரையின் நோக்கம்

நாட்டுப்புறவியல் சார்ந்த வில்லிசை – வில்லுப்பாட்டுக் கலைஞர்களின் பண்பாடு கலந்த வாழ்க்கையை அறிய முடிகிறது.

நாட்டுப்புறவியல் சார்ந்தவை அனைத்தும் ஆரம்ப காலத்தில் வாய்மொழி இலக்கியமாகவே இருந்தது. நாவினை அசைத்து ஒலி வேறுபாடுகளை உருவாக்கிய மனிதன் முதலில் தன் காதாரக் கேட்டு மகிழ்ந்தனர். இசைக் குழுவாக வாழ்ந்த மனிதன் வாயொலிகள் மூலம் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டான். மகிழ்ச்சியான வேளையில் கை கால்களை அசைத்தும் அதற்குத்தக ஒலியெழுப்பியும் ஆடினான் பாடினான். பொருளற்ற ஒலித் தொகுதிகள் பொருளுடைய ஒலித்தொகுதிகளாக வளர்ந்தன. ஆடுகின்ற பொழுதெல்லாம் பாடினான், பாடுகின்ற பொழுதெல்லாம் ஆடினான்.

"நாட்டுப்புறக் கலைகள் நிஜமானவை, நிலம் சார்ந்தவை, எளிமையானவை, இயல்பானவை, மரபார்ந்தவை, எனினும் மாற்றங்களுக்கு உட்பட்டவை. நிகழ்த்துபவர்கள் பார்வையாளர்கள் என்ற பேதமின்றி நிகழ்த்தும் கலைகளில் அனைவரும் பங்கேற்பவர்களாகவே ஆகிவிடுகிறார்கள். இக்கலைகள் தொழில் சார்ந்தவையாக இருந்தாலும் பண்பாடு சார்ந்த வாழ்க்கை மற்றும் சமய சடங்குகளில் பங்காளிகளாகவே விளங்குகின்றன"6 என்று காவ்யா சண்முகசுந்தரம் நாட்டுப்புறவியல் குறித்து விளக்குகின்றார்.
இவ்வாறு அமையப்பெற்ற நாட்டுப்புறப் பாடல்களில் வில்லுப்பாட்டு மற்றும் வில்லுப்பாட்டுக் கலைஞர்களின் நிலையை நேர்காணல் மூலம் பெறப்பட்ட செய்தியை மூலமாகக் கொண்டு இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

முத்தாலங்குறிச்சி காமராசு நாட்டுப்புற கலைஞர்கள் என்னும் நூலில் வில்லிசைக் கலைஞர்கள் செய்தலை மணியன் - சந்தனமாரி: வேலவன் - சங்கீதா என்னும் நால்வரின் நேர்காணல்களை எழுதியுள்ளார். அவற்றின் அடிப்படையில் இக்கட்டுரை நாட்டுப்புற வில்லுப் பாட்டுக் கலைஞர்கள்ுன் பண்பாடு கலந்த வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டுகிறது.

வில்லிசை தோற்றம்

வில்லுப்பாட்டு தோன்றியது நெல்லை மாவட்டத்தில்தான், அதுவும் தமிழும் தென்றலும் தோன்றும் பொதிகை மலையில்தான், “பொதிகை மலையில் கடையெழு வள்ளல்களில் ஒருவன் என்று போற்றப்படும் ஆய் அண்டிரன் பண்டைக்காலத்தில் தனது பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்கின்றான்;. வேட்டையில் பல்வேறு விலங்குகளை வேட்டையாடிச் சுட்டுத் தின்கின்றனர். அதன் மீதி மாமிசத்தினையும், தேனையும் மரத்தின் மீது எறிந்து விட்டுச் செல்கின்றனர். அந்தத் தோல் இரண்டு மரத்தின் இடையே மிகவும் டெம்பராக மாட்டிக் கொண்டது. காற்று அடிக்கும் போது அந்தத் தோலிலிருந்து கிளம்பிய ஓசையைக் கேட்டு மகிழ்ந்த வீரர்கள் அதற்கேற்ப தங்கள் கைவசம் வைத்திருந்த ஆயுதங்களை வைத்து இசைக்க ஆரம்பித்தனர். கையில் வைத்திருந்த வில்லை வளைத்து அதில் நாண் கட்டி அடித்து இசை எழுப்பினர். இவ்வாறு தோல் உடுக்கையாக மாறியது, அம்பு வீசு கோலாக மாறியது. வில்லை சலச் சலக் என்று சத்தம் வரவழைக்க நாண் கட்டி வைத்தார்கள். கொலைக் கருவி, கலைக் கருவியாக மாறியது அதன்பின் வில்லுப்பாட்டை ஒழுங்குபடுத்தினார்கள்”7 என்று முத்தாலங்குறிச்சி காமராசுவிடம் செய்தலை மணியன் வில்லிசை தோன்றிய வரலாற்றைக் குறிப்பிடுகிறார். இக்கருத்தையே வில்லிசைக் கலைஞர் கலைமாமணி வேலவன், “வேட்டைக்குச் செல்லும் படைவீரர்கள் தங்களது வேட்டைப் பொருள்கள் கிடைக்கவில்லை என்றால் கையில் கொண்டு போன வில்லை வைத்துக்கொண்டு அடித்து ஓலமிடுவார்கள் அதுதான் வில்லுப்பாட்டானது“8 என்று விளக்குகின்றார். மேலும் வில்லுப்பாட்டின் சிறப்பினைக் சுப்பிரதீப கவிராயர் எழுதிய விறலிவிடு தூது எனும் நூலில் வில்லுப் பாட்டுப் பற்றிக் குறிப்பு காணப்படுவதாக் கவிஞர் சுப்பு ஆறுமுகம் கூறுகிறார்.

மேலும் “வில்லுப்பாட்டின் தோற்றத்தைப் பற்றிக் கவிஞர் சுப்பு ஆறுமுகம் குறிப்பிடும்பொழுது தென்பாண்டி காட்டுப் பகுதியில் அன்றுள்ள வேடர்கள் வேட்டையாடிவிட்டு வந்து மரத்தடி நிழலில் அமர்ந்தபோது தோளிலிருந்து வில்லை மடியில் சாய்த்து, அம்பை அந்த நாணில் தட்டித் தட்டிப் பாட்டைத் துவக்குகிறார்கள்”9 என்று கவிஞர் சுப்பு ஆறுமுகம் கூறுகிறார்.

வில்லுப்பாட்டில் இடம் பெறுபவர்கள்

மொத்தம் ஆறு பேர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். “முதலில் புலவர், இரண்டாவது குடம் போடுபவர், மூன்றாவது உடுக்கு அடிப்பவர், நான்காவது கட்டை போடுபவர், ஐந்தாவது வெண்கலப் பொருள் வைத்து தாளம் போடுபவர், ஆறாவது வீக்கோல் அடிப்பவர் என்று ஆறுபேர் வேண்டும்”10 என்று செய்தலை மணியன் குறிப்பிடுகிறார். “காலங்கள் மாற மாற கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆர்மோனியம் இல்லையென்றால் வில்லுப் பாட்டே இல்லை என்றாகிவிட்டது”11 என்று பிற்காலத்தில் வில்லுப்பாட்டில் ஆர்மோனியம் இடம் பெற்றதைக் குறிப்பிடுகிறார்.

வில்லுப்பாட்டின் உறுப்புகளாக அமைந்த இசைக் கருவிகள் வில், உடுக்கு, முடக்கு, தாளம், கட்டை ஆகியவற்றோடு பம்பை, உறுமி, தக்கை, துந்துபி என்ற நான்கு கருவிகளும் சேர்ந்து எட்டுவகையான பக்கக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

வில்லுப்பாட்டு – பாடுபொருள்

நவநீதகிருஷ்ண பிள்ளை என்பவர் ஔவையார் கதை, கண்ணன் விளையாட்டு போன்றவற்றை வில்லுப்பாட்டு; நூலாக எழுதியுள்ளார். அகத்தீஸ்வரம் ஆறுமுக பெருமாள் நாடார் குமரி மாவட்டக் கோயில்கள் வரலாற்றையும், நாஞ்சில் நாட்டுச் சிறு தெய்வ வரலாறுகளையும் வில்லுப்பாட்டு நூலாக எழுதியுள்ளார். இவர்களுக்கு மாறாகச் செய்தலை மணியன் “நளதமயந்தி, ஔவையார், காந்தி மகான், வ.உ.சி நேரு, காமராசர் போன்ற அரசியல் தலைவர்கள் மற்றும் காணிமாடன், சிறுமளஞ்சி பட்டாணி சாமி வரலாறு, மருத்து பிரை

*இசக்கியம்மன் வரலாறு, பஞ்சலிங்கபுரம் வாழையடி மாடன் போன்ற வில்லுப்பாட்டுக் கதைகளை உருவாக்கியுள்ளோம்''12 என்று கூறுகின்றார்.*

*தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த குருவிக்குளம் வேலவன் சங்கீதா வில்லுப்பாட்டு சிடி கேஸட் வெளியிடுகிறார். ''சிறு தெய்வ வழிபாட்டுக் கதைகள், ஸ்ரீதர்மசாஸ்தா சுடலை மாடசாமி, கருப்புச்சாமி, மதுரை வீரசாமி, பொண்ணாண்ட சுவாமி, சங்கிலி பூதத்தார், முத்துப்பட்டன், அய்யா வைகுண்டர், அம்மன் கதைகள், மாரியம்மன், இசக்கியம்மன் நீலிகதை, முத்தாரம்மன், பத்ரகாளியம்மன், குலவாழை இசக்கியம்மன் , சந்தோஸிமாதா போன்ற வரலாற்று கதைகளை எழுதி வைத்து நிகழ்ச்சி நடத்தி வருகிறோம்''13 என்கிறார் வேலவன் சங்கீதா.*

*இந்த வில்லுப்பாட்டுக் கதைகளின் மூலம் தெய்வ வழிபாட்டின் சிறப்பையும், மக்களின் பண்பாட்டையும் அறிய முடிகிறது. மேலும் பக்த சிரோன் மணிகளான பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க சுவாமிகள், ராகவேந்திர சுவாமிகள், காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியார், தேசிய தலைவர்கள், விடுதலை வீரர்கள், இயேசு காவியம், நபிகள் நாயகம், சினிமா நடிகர்களின் சரித்திரம், அரசியல் தலைவர்கள், மத நல்லிணக்கம், ஆதிமெய்வழிச் சாலை, ஆண்டவர் உள்பட பலரின் வரலாற்றை எழுதி வில்லுப்பாட்டில் இசைத்து வருகின்றனர். இவற்றால் பக்திச் சிறப்பும், தேச பக்தியும், தேச ஒற்றுமையும் மக்களிடையே இரண்டறக் கலந்து பண்பாட்டுச் சிறப்பும் மேலோங்குகின்ற நிலை வளர்கின்றது.*

*அதோடு மட்டுமல்லாமல் கிராமத் தெய்வங்களான குருவன் கோட்டை மாரியம்மன், பேயன் விளை பொன் மாடசாமி, குருவிக்குளம் அய்யனார், கருப்பசாமி அபிகேசப்பட்டி முப்பிடாதி அம்மன் தொடர்பான சி.டி.யும் வெளிவந்துள்ளது. மக்கள் மத்தியில் சிறப்பானதொரு பொழுதுபோக்கு நிகழ்வாகவும் வில்லுப்பாட்டு அமைகின்றது.*

*வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்*

*வில்லுப்பாட்டில் ஆண்பால் புலவர்களாக நெல்லை அய்யம்பிள்ளை, வண்ணார்பேட்டை வடிவேல் புலவர், வடிவேல் பேரன் தோவாணை சுந்தரம் பிள்ளை, புன்னர் குளம் கோலப்ப பிள்ளை, சாத்தூர் பிட்டை குட்டி, கழுகுமலை, செவல்குலம் தங்கையா, கருவந்தா புலவர், புளியங்குடி பெருமாத்தேவர், முத்துகிருஷ்ணபுரம் சொல்விளங்கும் பெருமாள் நாடார், கிளாக்குளம் சண்முகசுந்தரம் நாடார், டவுன் நாராயணசாமிதாஸ், பாவூர்சத்திரம் கந்தசாமி புலவர், ராமசாமி புலவர் ஆகியோர் சிறப்பான முறையில் வில்லுப்பாட்டு நிகழ்வை அமைத்துப் புகழ் பெற்றனர்''14*

*''பெண்பால் புலவர்களான தோணித்துறை முத்துலட்சுமி, கிருஷ்ணபுரம் முத்துலட்சுமி, நெல்லை வேலவன் சங்கீதா, சின்னார்குளம் ஆறுமுககனி போன்றவர்கள் நன்றாகப் பாடி வருகின்றனர்.''15*

*வில்லுப்பாட்டு தொடக்கம்*

*வில்லுப்பாட்டின்; கதையினைத் துவங்கும் முன்பு காப்பு விருத்தம் பாடுவர், விநாயகர் வணக்கம் பாடப்படும், குருவடியை அடுத்து அவையடக்கமும் பின்னர் நாட்டுவளம் கூறி இறுதியில் வழிபாடல் நடைபெறும். இக்கலையை நாடறியச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களையே சாரும்.*

*வில்லுப்பாட்டு – நம்பிக்கை*

*வில்லுப்பாட்டில் திசைகட்டும் பாடல் மந்திரசக்தி போன்றது. முதலில் விநாயகர் வணக்கம், குருவடி வணக்கம் பாடி விட்டு திசைகட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். ''அந்தப் பாடல் பாடும் போது, துஷ்ட தேவதைகள் நாலு திசையில் இருந்தும் திருவிழா நடக்கும் இடத்துக்கு வரக்கூடாது என்று கட்டு கட்டிப் பாடுவார்கள்.''16 என்று திசைகட்டும் பாடல் பாடுவதற்கான காரணத்தைச் செய்தலை மணியன் கூறுகிறார்.*

*''வில்லுப்பாட்டு நடக்கும் சில இடங்களில் மந்திரம் தெரிந்தவர்கள், வில்லு புலவர்களைப் பாடவிடாமல் அவர் வில் நாண் அறுந்துவிடும் அளவு சேட்டை செய்வார்களாம். அவர்களை மடக்க தங்களது மந்திர சக்தியால் குடத்துக்குள் தவளையைப் போட்டு தம்...தம்...என்று அடிக்கும் போது தவளை வயிறு வீங்கும். அதேபோல் எதிரே மந்திரம் போட்டு வில் நாண் அறுத்தவர் வயிறு வீங்கி விடுமாம். அதன் பிறகு கச்சேரி நிம்மதியாக நடக்கும்''17 என்று*

செய்தலை மணியன் வில்லுப்பாட்டுக்குத் தடையாக இருந்தவர்களையும் அந்தத் தடையை நீக்கிய நிகழ்வையும் குறிப்பிடுகிறார்.

மேலும் "யாரும் மந்திரம் போட்டு குரல் வளத்தினைக் கட்டுப்படுத்தி விடக்கூடாது என்பதற்காக வைக்கோல் பிரியை எடுத்து அதை மூன்று துண்டுகளாகப் பிரித்துபோட்டு மந்திரம் செய்து போட்டுவிட்டுத்தான் வருவோம்"18 என்று செய்தலை மணியன் மந்திரம் போடுவதைத் தடுப்பதற்கானப் பரிகாரம் செய்யப்பட்டதை விளக்குகின்றார்.

வில்லிசைக் கலைஞர்களின் தற்கால நிலை

கோவில் விழாக்களில் மட்டும் இடம் பெற்று வந்த வில்லுப்பாட்டு கல்யாணவீடு, பூப்புனித நீராட்டு விழா, அரசியல் கூட்டங்கள் போன்றவற்றிலும் இடம்பெறுகிறது. கொடை விழாக்களில் இரவு 10 மணியிலிருந்து மறுநாள் 6 மணிவரை நடைபெறும். விழாவிற்கு வந்த மக்கள் நடைப்பயணமாக இரவில் தங்கள் ஊருக்குச் செல்ல இரவில் விளக்கு வசதி இல்லாததால் விடிய விடிய கலைஞர்கள் வில்லுப்பாட்டு நிகழ்த்தினர். "சிலவிடங்களில் சாமிக்குப் போகும் படையில் நாய் எதுவும் வந்து விழுந்து விடக்கூடாது என்பதற்காக வில்லுப்பாட்டு கலைஞர்கள் காலை 6 மணிவரை வில்லிசைக்க வேண்டிய கட்டாயம் தற்போது உள்ளது"19 என்று கலைஞர்களின் அவல நிலையை விளக்குகிறார்.

திருவிழாக் காலங்கள் போக மீதிக் காலங்களில் கவியரங்கம், பட்டிமன்றம், இசை பட்டிமன்றம், பக்தி இன்னிசை என்று பல நிகழ்ச்சிகள் வில்லிசை கலைஞர்களால் நடத்தப் பெறுகின்றன. வருவாய் குறைவாக இருந்தாலும் வில்லிசை மேல் உள்ள பக்தியால் அந்தத் தொழிலை விட்டுவிடாமல் செய்து வருகின்றனர்.

அரசு செய்ய வேண்டியவை

அரசு வில்லுப்பாட்டுக் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். "அரசு சலுகைகளைக் கருணை அடிப்படையில் வழங்க வேண்டும். குறிப்பாக பள்ளிகளில் முறையாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கான பள்ளிகளை உருவாக்க வேண்டும். நாதஸ்வரம், நாட்டியம், தவில் போன்றவை கற்றுத் தருவதோடு வில்லிசையையும் ஒரு பாடமாகக் கற்றுத் தர வேண்டும். தமிழுக்குரிய வில்லிசையைப் பல மாநிலங்களுக்கு கொண்டு சென்று சுமார் 5 ஆயிரத்து மேற்பட்ட நிகழ்ச்சியை நடத்திய கலைஞர்களுக்குத் தமிழக அரசு கலைமாமணி விருது வழங்க வேண்டும். இதுதான் எங்களுடைய ஆசை"20 என்று செய்தலை மணியன் தன்னுடைய விருப்பத்தையும் வேண்டுகோளையும் அரசிடம் வெளிப்படுத்துகிறார்.

முடிவுரை

வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புறப் பாடல்களில் வில்லுப்பாட்டு மக்களிடையே பரந்த வரவேற்பினைப் பெற்ற ஒன்றாகும். வில்லுப்பாட்டுகள் மூலம் தமிழர்களின் ஆன்மீகம், பண்பாடு, கலையறிவு போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. வில்லுப்பாட்டுக் கலைஞர்களின் வாழ்க்கை நிலை உயரப் பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. Merriam Webster dictionary interview, dictionary definition.
2. The oxford English dictionary, second edition, 1989
3. தமிழ் இணையக் கல்விக் கழகம் ta.m.wikipedia.org.
4. தொ. புரமசிவன், நேர்காணல்கள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்(பி)லிட், நூலின் பின்பக்க அட்டைக்குறிப்பு.
5. தமிழ் இணையக் கல்விக் கழகம் ta.m.wikipedia.org.
6. காவ்யா சண்முகசுந்தரம், "பதிப்புரை" நெல்லை நாட்டுப்புறக் கலைஞர்கள்,
7. முத்தாலங்குறிச்சி காமராசு, நெல்லை நாட்டுப்புற கலைஞர்கள், பக். 84-85
8. மு.கு.நூல், ப. 102
9. சுப்பு ஆறுமுகம், காந்தி வந்தார், வில்லுப்பாட்டு, 1 – 5
10. முத்தாலங்குறிச்சி காமராசு, நெல்லை நாட்டுப்புறக் கலைஞர்கள், பக். 88
11. மு.கு.நூல், ப. 89
12. மு.கு.நூல், ப. 92
13. மு.கு.நூல், ப. 105

*14. மு.கு.நூல், ப. 88*
*15. மு.கு.நூல், ப. 93*
*16. மு.கு.நூல், ப. 86*
*17. மு.கு.நூல், ப. 87*
*18. மு.கு.நூல், ப. 88*
*19. மு.கு.நூல், ப. 90 - 91*
*20. மு.கு.நூல், ப. 95*

*துணைநூற் பட்டியல்;*


*1. முத்தாலங்குறிச்சி காமராசு, நெல்லை நாட்டுப்புற கலைஞர்கள், வெளியீடு : காவ்யா, 16 இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 600024, நவம்பர் 20, 2013.*
*2. தொ. பரமசிவன், நேர்காணல்கள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி)லிட், 669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629001, மூன்றாம் பதிப்பு 2021.*
*3. Merriam Webster dictionary, dictionary definition retrived February, 2016*
*4. The oxford English dictionary, second edition, 1989.*
*5. தமிழ் இணையக் கல்விக் கழகம், ta.m.wikipedia.org.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********